# ஒழிந்து போ கொரோனா!



எழுத்து மற்றும் ஓவியங்கள்  திவ்யா தோமஸ்

மொழிபெயர்ப்பு  டாக்டர் எஸ். முருகு சுந்தரம்

மாற்றம் ஏதோ காற்றிலே
மனசு முழுதும் பயத்திலே.

கொடிய வகை வைரஸொன்று
கொரோனா என்ற பெயரிலே
உலகமெங்கும் பரவியே
கலக்கமடையச் செய்யுதே.



எத்தனை நாள் இருக்குமோ
எவ்வளவு அழிக்குமோ
அத்தனையும் அழியுமுன் அகிலமதைக் காக்கணும்
பரவும் இந்தக் கிருமியை பயந்து ஓடச் செய்யணும்
பயந்து ஓடச் செய்யவே பசங்க என்ன பண்ணனும்?

சுத்தமாகக் கைகளை சோப்பு போட்டுக் கழுவணும்.
கண் மூக்கு வாய் வழிதான்
கிருமியது நுழையுதாம்
கவனமாக அனைவரும்
கைதொடாமல் இருக்கணும்.
தள்ளித் தள்ளி இருக்கணும், முகக்கவசம் அணியணும்.



வீட்டிலேயே இருக்கணும்
விளையாடி தினம் மகிழணும்.

அம்மாவுக்கு உதவணும்
ஆடிப்பாடிப் பழகணும்.

விலகி நாம் இருந்தாலும் விண்மீன்கள் நம்மை சேர்த்திடும்
அவரவர் வீட்டினில் இருப்பினும்
அன்பு நம்மை இணைத்திடும்.

பறந்து திரியும் பறவையின் பாடல்களை ரசிக்கணும்
பாசத்தோடு மரங்கள் பேசும் பல மொழிகள் கேட்கணும்.



நம்மைப் போல நண்பரும் நலமுடனே வாழணும்
ஒரே வானக்குடையின் கீழ் ஒற்றுமையாய் இருக்கணும்.

அச்சமின்றி வாழணும் அறிவு பெற்றுத் தெளியணும்
கலங்காமல் சிரிக்கணும் காத்திடுவர் மருத்துவர்.



உணவு உடை உறைவிடம் ஊரில் யாரும் பெற்றிட
நம்மால் முடிந்த உதவிகள் உடனே
நாமும் செய்யணும்.

உலகம் விரைவில் நலம் பெற ஊரடங்கும் முடிந்திட
உள்ளிருப்பு விதிகளைக்
கடைபிடித்து நடக்கணும்.

இன்னும் கொஞ்ச நாளிலே இதுவும் கடந்து போய் விடும்
இஷ்டம் போல எங்குமே ஓடியாடி மகிழலாம்.



# சிந்திக்கவேண்டிய சில விஷயங்கள்

வீட்டிற்குள்ளேயே இருக்கும்பொழுது, எப்படி ஜாலியாக இருக்கிறீர்கள்?
அப்படி இருக்க என்னவெல்லாம் செய்கிறீர்கள்?

யாருக்காவது நாம் இப்போ நன்றிசொல்ல வேண்டும்என்றால்,
யாருக்கு நீங்கள் நன்றி சொல்லுவீர்கள்? எதற்கு நன்றி சொல்லுவீர்கள்?

வீட்டிற்குள்ளேயே இருக்கும் இந்த நேரத்தில், புதிதாக என்ன கற்றுக்கொண்டீர்கள்?
என்ன திறனை நீங்கள் வளர்த்துக் கொண்டீர்கள்?

திடீரென்று உங்களுக்குள் ஒரு குழப்பம் வருகிறது,
அந்த குழப்பத்தை தீர்க்க யாரிடம் பேசுவீர்கள்?

உங்கள் கனவில் நீங்கள் எங்கே போவீர்கள்?
யாரை பார்ப்பீர்கள், என்னவெல்லாம் செய்வீர்கள்?









Go Away Coronavirus

Written and Illustrated by Divya Thomas

www.anillustratedworld.com

@an_illustrated_world

© Divya Thomas 2020

This book is a work of fiction based on the author's experiences. Characters, places and events are either products of the author's imagination or used in a fictitious manner. This book is intended as a work of fiction, not to give medical advice or information. If information is required about any content in the book, do ask an appropriate registered medical professional.